**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.960/2022**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கவேல் | தொழில் | : விவசாயம் மற்றும் தனியார் வியாபாரம் |
| தகப்பனார் பெயர் | : கந்தசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 67 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>2, 5, 6, 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

நான் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? பழனிச்சாமி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பழனிச்சாமிக்கு தொகை எவ்வளவு கொடுத்துள்ளேன் என்றால் ? தொகை ரூ.4,80,000 தொகைக்கு ஒப்பந்தம் பேசப்பட்டு தொகை ரூ.4,50,000 முன்பணமாக கொடுக்கப்பட்டது. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஒப்பந்த பத்திரமானது பதிவு செய்யப்படாத உடன்படிக்கை பத்திரம் என்றால் ? சரிதான். நான் இந்த வழக்கை எந்த ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் ? 2006ம் ஆண்டு தாக்கல் செய்தேன். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சொத்தினை பேசியபடி கிரையம் செய்து தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ? 13.08.2003ம் தேதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் பதிவு செய்துள்ள கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் ? அது சரியல்ல. உடன்படிக்கையானது பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஆகும். நான் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் தொகை ரூ.4,80,000 என்று

குறிப்பிட்டு தொகை ரூ.4,50,000 கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் மீதி பாக்கி கிரைய தொகை ரூ.30,000 தொகைக்கு ஒரு ஆண்டு காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் ? சரிதான். தொகை ரூ.30,000 தொகையினை கொடுத்து நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கும் கிரையம் செய்ய தயராக இருந்தேன் என்றால் ? சரிதான். நான் ஓராண்டிற்குள் கிரையம் செய்து தரும்படி வழக்குரைஞர் வழியாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ? அறிவிப்பு அனுப்பினேன். நேரிலும் பலமுறை கேட்டேன். நான் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு முடிவதற்குள் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும், ஒப்பந்த பத்திரத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒருவருட காலம் முடிவடைந்து பின்னிட்டு இரண்டு வருங்கள் கழித்து 26.08.2006ம் நாள் பிரதிவாதிக்கு வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ? சரிதான். அந்த அறிவிப்பை பிரதிவாதி வாங்கிவிட்டாரா என்றால் ? வாங்கி கொண்டார். நான் சொல்வது தவறு என்றாலும், பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் ? சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் நானாகவே உற்பத்தி செய்து கொண்ட ஆவணம் என்றால் ? சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ? சர்வே எண்.460/5, 461, 462, 463, 464, 466, 467 மற்றும் 465 என்ற சர்வே எண்ணில் கிணறு மின்மோட்டார் உள்ளது. சர்வே எண்.465, 461 ஆகிய புலங்களுக்கு பாப்பாகுளம் என்ற குளங்களுக்கு அதில் உள்ள புலங்களிலில் இருந்து தண்ணீர் பூமிக்கு வருகிறது. வா.சா.ஆ–1 ஒப்பந்த பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ? பத்திரப்பதிவு எழுத்தர் கணேசன் என்பவரது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ–1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டது யார் யார் என்றால் ? முனியப்பன் என்பவர் சாட்சி கையொப்பம் போட்டார். அவர் இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணம் எத்தனை மணி அளவில் எழுதப்பட்டது என்றால் ? சுமார் 12 மணி இருக்கும். வா.சா.ஆ–1 ஒப்பந்த பத்திரத்தை யார் எழுதினார்கள் என்றால் ?

கணேசன் ஆவண எழுத்தர் எழுதினார். சாட்சி கையொப்பம் போட்ட நபர்கள் எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்றால் ? ஆமாம். இவ்வழக்கு பிரதிவாதிக்கு 24.06.1999 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் தன்மைபடி சொத்துரிமை பாத்தியம் ஏற்பட்டுள்ள சொத்து என்றால் ? சரிதான். 24.06.1999 தேதியிட்ட மூலபத்திரம் யாரிடம் உள்ளது என்றால் ? என்னிடம் தான் உள்ளது. அந்த பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? இல்லை. அவ்வாறு தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதேனும் உண்டா என்றால் ? குறிப்பிட்ட காரணம் ஏதும் இல்லை. 3-ம் நபர்களுக்கு சொத்தினை விற்பனை செய்வதாக நான் சொல்லியுள்ள நிலையில் நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கை, வழக்குரை ஆகியவைகளில் சொல்லியுள்ள நான் அந்த மூன்றாம் நபர் யார் என்றால் ? வேலுச்சாமி மற்றும் நாகராஜ் ஆகியோர்கள் தான் நிலத்தினை வாங்கியுள்ளார்கள்.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.07.06 17:53:19 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்